[7th November 1966

Bonus Act

* 475 *Q.*—SRI M. KALYANASUNDARAM :
SRI V. SANKARAN : } Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to extend the provisions of the Bonus Act to the workers annd employees of State Electricity Board; and

(*b*) if so, when a final decision would be taken ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) A policy decision was taken by the Government to the effect that the provisions of Payment of Bonus Act, 1965 would apply to the employees of the Madras State Electricity Board and on this decision being conveyed to the Board, the Board has declared bonus to its employees for the last two years, 1964–65 and 1965–66.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த போனஸ் தொகை எவ்வளவு வழங்கப்பட்டது என்று அறியலாமா ? எப்போது வழங்கப்பட்டது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான்கு சதவீதம் வழங்கப் பட்டது. எப்போது என்ற விவரம் இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சமீபத்தில் உயர்தரக் கோர்ட்டு களின் தீர்ப்புகளில் காரணமாக போனஸ் ஆக்டுக்குப் பாதகம் ஏற்பட்டிருக்கிறது. அப்படியானால் இப்போது கொடுக்கக்கூடிய சலுகைளுக்கு மாற்று வழி செய்ய என்ன ஏற்பாடு செய்வார்கள் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தக் கேள்வி கனம் முதலமைச்சர் அவர்களுக்குப் போட வேண்டியது. எலக்ட்ரிசிடி போர்டு தொழிலாளர்களுக்குப் போனஸ் கொடுக்கப்பட்டதா என்று கேட்டதற்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று பதில் சொன்னேன்.

Seeds

* 476 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any new varieties in paddy, pulses, millets and cereals have been evolved yielding greater output or in a shorter period; and

(*b*) if so, the programme that has been envisaged to boost production through them ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes

Paddy—

Culture No. 2914, Culture No. 2701 and Culture No. 2410.

7th November 1966]

Millets—

Cholam : Hybrid CSH 1.

Cumbu : Hybrid X3. Hybrid HB. 1

Ragi : Co. 7.

Pulses—

ADT. 1 (wetland blackgram).

(*b*) A statement[a] is placed on the table of the House.

திரு. மா. தண்டாயுதபாணி : புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட நெல் விதை இந்த ஆண்டு எந்த மாவட்டத்தில் பயிர் செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது? எத்தனை ஏக்கர் விஸ்திரணத்தில் பரிசோதிக்கப்பட்டது ?

கனம் திரு. பூ. கக்கன் : பெரும்பகுதி தஞ்சை ஜில்லாவில்தான். கிட்டத்தட்ட 3 லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்வதற்காக விதை கொடுத்து அரசாங்கம் உதவி செய்திருக்கிறது. மேலும் சில ஜில்லாக்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஆடுதுறை 27 நெல் விதை ஓரளவு அதிகமான விளைச்சலைக் கொடுக்கக்கூடியதாக இருந்தாலும், அது விளைந்த பிறகு பனி பெய்தாலும் அல்லது மழை பெய்தாலும் அப்படியே முளைத்துவிடக் கூடியதாக இருக்கிறது. அது சம்மந்தமாக ஆராய்ச்சி செய்யப் பட்டதா ?

கனம் திரு. பூ. கக்கன் : எந்த இடத்தில் அப்படிப் போயிருக்கிறது என்று தெரியவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் எந்த இடத்தில் அப்படி ஆகியிருக்கிறது என்று தெரிவித்தால் அதைப் பற்றிக் கவனிக்கலாம்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : சமீபத்தில் அலங்காநல்லூரில் நெல் அடிக்கப்பட்டு களத்தில் வைத்தது பூராவும் முளைத்து விட்டது. அந்த நெல்லை ப்ரொக்யூர்மெண்டும் செய்யவில்லை; வியாபாரிகளும் வாங்குவதில்லை; மதுரைக்குக் கொண்டு போய் விற்கலாம் என்றால் அதற்கும் பர்மிட் கொடுப்பதில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : ஆடுதுறை 27 நெல் மழை காலங்களில் ஒத்து வராததால் கோடைக்காலங்களில் இந்த விதையை விதைத்து சாகுபடி செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : குறிப்பாக, நம்முடைய மாநிலத்தில் உற்பத்தியை அதிகமாகப் பெருக்க வேண்டுமென்ற காரணத்தால் ஏ.டி.டி. 27 நெல் கண்டு பிடிக்கப்பட்டது. அதனால் அதிகமான உற்பத்தியும் ஆயிற்று. இதைக் காட்டிலும் நல்ல விதை இருந்தால் அதைக் கொண்டு வர அரசாங்கம் முன்வரும்.

---

[a] Printed as Appendix VII on pages 570–572

[7th November 1966

திரு. மா. தண்டாயுதபாணி: இந்த ஏ.டி.டி. 27 நெல் கடந்த ஆண்டு 5,000 ஏக்கரில் பயிர் செய்யப்பட்டது. அதைப் பயிர் செய்யும்போது சாதாரண நெல்லுக்குக் கொடுக்கக் கூடிய உரத்தை விட அதிகமாகக் கொடுத்தால்தான் நல்ல முறையில் விளையக்கூடிய தாக இருக்கிறது. இந்த ஆண்டு 3 லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்திருக்கிறார்கள். குறிப்பிட்ட அளவுக்கு உரம் கொடுத்தால் தான் ஹை ஈல்டு புரோகிராம்படி விளைச்சல் கிடைக்கும். இந்த மூன்று லட்சம் ஏக்காரவில் பயிர் செய்வதற்கான அளவு சூப்பர் பாஸ்பேட் உரம் கிடைக்கவே இல்லை. ஆகவே, உரத்தை அதிக மாகக் கொடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக் கிறது ?

கனம் திரு. பூ. கக்கன்: இந்த ஏ.டி.டி. 27 விளைவிக்கக் கூடிய பகுதிகளுக்கு அதிகமாக உரம் கொடுக்க வேண்டுமென்பதற்காக மத்திய அரசாங்கத்தில் இருந்து தனியாகக் கேட்டுப் பெற்று எந்த அளவுக்குக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு உரம் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது.

திரு. கோ. சி. மணி: சென்ற பசலியில் குறுவை சாகுபடி யானதை விட அதிகமாக மூன்றில் இரண்டு பங்கு நிலத்தில் இப்போது ஏ.டி.டி. 27 விதையை அந்த நிலங்களிலும் பயிரிடும் போது அதற்குத் தக்க விகிதத்தில் உரத்தை அதிகரித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன்: அந்தத் தகவல் இல்லையென்றாலும் பொதுவாகக் கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி: ஏ.டி.டி. 27-க்கு அதிகமாக உரம் கொடுத்தால் அதிகமாக விளையும் என்று சொன்னார்கள். நம்முடைய நாட்டு நெல்லுக்கும் அதிகமாக உரம் கொடுத்தால் அதிகமாக விளையுமா என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்தார்களா ?

கனம் திரு. பூ. கக்கன்: இந்த ஏ.டி.டி. 27-ஐப் பொருத்தவரை அதிகமாக உரம் போட்டால் அதிகமாக விளைச்சல் கொடுக்கும்.

Cocoanut Package Units

*477. Q.—Sri V. SANKARAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether any scheme is envisaged for establishing new cocoanut plantations in Madras State; and

(b) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) ஆம்.

(இ) சபைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட் டுள்ளது.

---

* 572–574-ம பக்கங்களில் வட்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.